1986 நவம்பர் 25]

(ஆ) ஆம் எனில், ஊதிய உயர்வு எந்த அடிப்படையில் வழங்க உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) என்.சி.சி. பயிற்சி ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம்தான் (Honorarium) தரப்படுகிறது.

(ஆ) இந்த மதிப்பூதியத்தை கீழ்க்கண்டவாறு இரட்டிப்பாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

	முன்பு அளிக்கப் பட்ட விகிதம்.	1-4-1986-க்குப் பின்னர் அளிக்கப் படும் விகிதம்.
முதுநிலை பிரிவு (Senior Division) மற்றும் மகளிர் பிரிவு முதுநிலை.		
மேஜர்	ரூ. 100 மாதந்தோறும்	ரூ. 200 மாதந்தோறும்
காப்டன்	ரூ. 90 ,,	ரூ. 180 ,,
லெப்டினட்	ரூ. 80 ,,	ரூ. 160 ,,
2 லெப்டினட்	ரூ. 75 ,,	ரூ. 150 ,,
இளநிலை பிரிவு (Junior Division) மற்றும் மகளிர் பிரிவு இளநிலை.		
தலைமை அதிகாரி	ரூ. 75 மாதந் தோறும்	ரூ. 150 மாதந் தோறும்
முதல் அதிகாரி	ரூ. 65 ,,	ரூ. 130 ,,
இரண்டாம் அதிகாரி	ரூ. 55 ,,	ரூ. 110 ,,
மூன்றாம் அதிகாரி	ரூ. 50 ,,	ரூ. 100 ,,

சேலம் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

175 —(*வினா எண் 9605) **திருமதி தா. இராசாம்பாள் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஆத்தூரில் ஒன்றை தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மாவட்டங்களை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலையைவிட இன்றைக்கு உள்ள வேலையின் பளு 3 மடங்கு அதிகமாகி இருக்கின்ற காரணத்தால், தாலுக்கா அளவிலுள்ள எங்கள் ஆத்தூர் தாலுக்காவில் ஒரு கல்வி மாவட்டத்தை ஏற்படுத்த அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்வி மாவட்டத்தை அமைப்பதற்கு 5.7 இலட்சம் செலவாகும். கிட்டத்தட்ட 800 லிருந்து 900 வரைக்கும் பள்ளிகள் அந்த வட்டத்திற்கு உட்பட்டிருக்க வேண்டுமென்று விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக 2,422 பள்ளிகள் இருக்கின்றன. ஏற்கனவே 3 கல்வி மாவட்டங்கள் இருக்கின்றன. சேலம், நாமக்கல், சங்ககிரி ஆகிய மூன்றும் சேலத்தின் 3 கல்வி மாவட்டங்கள் ஆகும். எனவே, சேலத்தை இரண்டாகப் பிரித்து ஆத்தூரில் கல்வி மாவட்டம் ஏற்படுத்த வேண்டுமென்றால், அங்கே 400 பள்ளிகள் தான் வரும். அது தற்போதைய விதிக்கு உட்படாமல் இருக்கின்ற காரணத்தால், அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துவக்கப் பள்ளிகளுக்கென இயக்குநரகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. ஆனால், மாவட்ட அளவில் அதற்குத் தனியாக மாவட்ட அலுவலர்களை நியமிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. கல்வி மாவட்டங்களைப் பிரிக்க முடியவில்லை என்று சொன்னாலும், இருக்கின்ற கல்வி மாவட்டங்களில் துவக்கப் பள்ளிகளுக்கு என்று தனி மாவட்ட அலுவலர்களை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சியினை மேற்கொள்வார்களா? அப்படிப்பட்ட திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துவக்கப் பள்ளிக்கென இயக்குநரகம் தற்போது தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை விரிவாக்க அரசு படிப்படியாக நடவடிக்கைகள் எடுக்கும்.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கல்வி மாவட்டத்திலே மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கள் அந்தப் பள்ளிகளைத் தணிக்கை செய்வதற்கும் அதோடு ஆசிரியர்களுடைய நிர்வாகத்தில் உள்ள—பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களுக்கு மேலும் கொடுக்கப்படுகின்ற சத்துணவுப் பணிகளைக் கண்காணிப்பதற்கும் மிகவும் சிரமமாக

இருக்கிறது. ஏற்கனவே, 1960—61-லிருந்த ஆசிரியர்களைவிட தற்போது இருக்கிற ஆசிரியர்களுக்கு அதிகமான பிரச்னைகள் இருக்கிற காரணத்தினால் மீண்டும் பரிசீலனை செய்து அரசு ஆத்தூர் தாலுகாவில் கல்வி மாவட்டத்தை உருவாக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கும் தணிக்கை குறித்து அவர்களுக்குள்ள வேலைப் பளுவுக்கும் தொடர்பு இருப்பதாக நான் கருதவில்லை. ஆத்தூர் மாவட்டத்திற்கென தனியாக ஒரு மாவட்டம் அமைக்க வேண்டு மானால், தமிழகத்திலே ஒவ்வொரு பகுதியிலும் அதுபோன்ற பிரச்னைகள் எழுந்து, இன்னும் அதிகமான செலவு அரசுக்கு ஏற்படும். நிதிநிலைமையை ஒட்டித்தான் இதுபோன்ற நடவடிக் கைகளை எடுக்க முடியும்.

உத்திரமேரூரில் துணை நீதிமன்றம்.

176—(*வினா எண் 9844) திரு. க. நரசிம்மபல்லவன் : மாண் மிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூரில் துணை நீதிமன்றம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

இலவச சட்ட உதவி வழங்கும் திட்டம்.

177-(*வினா எண் 11224)—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலவச சட்ட உதவி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியம் எத்தனை இடங்களில் மத்தியஸ்த மையம் அமைத்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்தின் கீழ் 16 மத்தியஸ்த மையங்கள் இயங்கி வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க அவைத்தலைவர் அவர்களே, மேலும் எத்தனை மையங்களை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?